**DP/G5/2026/1**

எனது எண்: 6/5/புலமைப்பரிசில்/2026
பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை,
இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை, பத்தரமுல்ல.
2026 மார்ச் மாதம் 26 ஆம் திகதி

சகல அதிபர்களுக்கும்,

**பாடசாலைக்கு மாணவர்களை தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சை – 2026 விண்ணப்பப்படிவங்கள் பெற்றுக்கொள்ளல்**

மேற்படி பரீட்சையை 2026 ஓகஸ்ட் மாதம் 09 ஆம் திகதி நடாத்துவதற்கு **தீர்மானி**க்கப்பட்டுள்ளது. அதற்கமைய உங்கள் பாடசாலையில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள **விண்ணப்பதாரிகளை நிகழ்நிலை** (Online) முறையில் மட்டுமே பரீட்சைக்காக விண்ணப்பித்தல் வேண்டும். அதற்கான அறிவுறுத்தல்களையும் 2026 ஆம் ஆண்டிற்கான பிரமாணங்களையும் பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ **இணைய**த்தளத்தில் தரவிறக்கம் செய்து கொள்ள முடியும். விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் **கொள்வ**தற்கான இறுதித் திகதி **2026.04.30.** ஆம் திகதி ஆகும்.

02. **முறைமைக்குள் (System) நுழைவதற்கான அறிவுறுத்தல்கள்**

விண்ணப்பங்களை பூர்த்தி செய்வதற்காக,

- இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் **உத்தி**யோகபூர்வ (www.doenets.lk) இல் நுழைந்து "எமது சேவை" எனும் தலைப்பின் கீழுள்ள "Exam Information Centre" எனும் உபதலைப்பை Click செய்து அல்லது

- https://onlineexams.gov.lk/eic **எனும்** இணைப்பினூடாக பிரவேசித்த பின்னர்,

2.1 கிடைக்கப்பெறும் window இல் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பயநர் பெயர் (User name) மற்றும் கடவுச்சொல் (Password) என்பனவற்றை பயன்படுத்தி முறைமைக்குள் பிரவேசிக்கவும்.

2.2 **Scholarship** Examination For Grade 5 Students – 2026 Student Registration (Schools) எனும் **தலைப்பை** தெரிவு செய்வதன் மூலம் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்துவதற்கான தொழில்நுட்ப **அறிவுறுத்தல்**களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

2.3 விண்ணப்பதாரிகளின் விவரங்களை முறைமைக்குள் உள்ளடக்குவதற்கு முன்னர் உங்கள் பாடசாலைக்குரிய முகப்பில் (Profile) அதிபரின் பெயர், தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடுவது கட்டாயமாகும்.

03. **விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்**

இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுகின்ற பிரமாணங்களுக்கமைய விண்ணப்பத்தை அனுப்பும் சந்தர்ப்பத்தில் அரசாங்கப் பாடசாலைக்கோ அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலைக்கோ செல்லும் 5ம் தரத்தில் பயிலும் 2017.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பிறந்த மாணவராக இருத்தல் வேண்டும்.

உங்களுடைய பாடசாலையிலிருந்து பார்வைக் குறைபாடு கேட்டற் குறைபாடு மற்றும் வேறு விசேட தேவைகளுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதாயின் அவர்களுக்காக விசேட கல்வித் தேவையுடைய மாணவர்களுக்காக இணைப்பில் (Link) வழங்கப்பட்டுள்ள விவரங்களைப் பூர்த்தி செய்தல் வேண்டும். விசேட கல்வித் தேவையுடைய பரீட்சார்த்திகளுக்காக.

- இரத்மலானை கண்பார்வையற்றோர் பாடசாலை, இரத்மலானை
- பொலம்மாறுவ கண்பார்வையற்ற செவிப்புலனற்றோர் பாடசாலை, தங்காலை
- கைதடி நபீல்ட், கைதடி

விசேட பரீட்சை நிலையங்கள், வேறு பொருத்தமான இடங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைப்பது தொடர்பாக கவனஞ் செலுத்தப்படும்.

04. **அடையாள அட்டை எண்ணை வழங்குதல்**

4.1 இப்பரீட்சைக்காக நிகழ்நிலை முறைமையூடாக தரவுகளை உள்ளடக்கும்போது விண்ணப்பதாரருக்காக தனித்துவமான அடையாள எண் (Unique Identity Number) ஒன்று தரப்பட வேண்டும்.

4.2 பரீட்சைத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள பயநர் பெயருடன் (User Name) தொடர் இலக்கத்தையும் இணைத்து 8 இலக்க தறிபடுகளை கொண்ட அடையாள எண்ணை உருவாக்க வேண்டும். கீழே தரப்பட்டுள்ள உதாரணத்திற்கமைவாக

4.3 உங்கள் பாடசாலையின் பயநர் பெயர் (User Name) 4 இலக்கங்களை உடையதாயின், முதலில் 9 இலக்கமிட்டு அதனுடன் பயநர் பெயரையும் இணைத்து அடையாள எண் தயாரிக்கப்படல் வேண்டும்.

i. பயநர் பெயர் (User Name) 9322 எனின் விண்ணப்பதாரியின் தொடர் இல 1 எனின் 99322001 என அமையும்.

ii. பயநர் பெயர் (User Name) 4354 எனின் விண்ணப்பதாரியின் தொடர் இல 10 எனின் 94354010 என அமையும்.

iii. பயநர் பெயர் (User Name) 1240 எனின் விண்ணப்பதாரியின் தொடர் இல 101 எனின் 91240101 என அமையும்.

4.4 உங்கள் பாடசாலையின் பயநர் பெயர் (User Name) 5 இலக்கங்களை உடையதாயின், முதலில் பயநர் பெயரை இட்டு அடையாள எண் தயாரிக்கப்படல் வேண்டும்.

i. பயநர் பெயர் (User Name) 14129 எனின் விண்ணப்பதாரியின் தொடர் இல 1 எனின் 14129001 என அமையும்.

ii. பயநர் பெயர் (User Name) 22300 எனின் விண்ணப்பதாரியின் தொடர் இல 10 எனின் 22300010 என அமையும்.

iii. பயநர் பெயர் (User Name) 30012 எனின் விண்ணப்பதாரியின் தொடர் இல 101 எனின் 30012101 என அமையும்.

**05. உதவிப் பணம் பெற்றுக் கொள்வதற்காக வருமானம் தொடர்பாக உறுதிப்படுத்தல்**

5.1 பரீட்சார்த்தி ஒருவர் மாணவர் உதவிப் பணம் பெற எதிர்பார்த்திருப்பின் தகைமைகளுக்கு மேலதிகமாக அவரது பெற்றோர்/சட்டரீதியான பாதுகாவலர் எல்லா வழிகளிலும் வருடத்துக்கு ரூபா 180,000.00 அல்லது அதற்குக் குறைவான வருமானத்தை பெறுபவராயிருத்தல் வேண்டும்.

5.2 அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் "அஸ்வசும" வேலைத்திட்டத்தினால் பெறப்படும் உதவிப் பணம், வருமான எல்லையைக் கணிக்கும்போது கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

5.3 இத் தகைமையை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளர் ஊடாக உங்களின் மொத்த வருமானத்தை உறுதிப்படுத்தி அவ் வருமானம் கூடவோ அல்லது குறைவோ எனக் குறிப்பிட்டு அனுப்பி மீண்டும் நீங்கள் பெற்றுக்கொள்ளும் ஆவணத்திற்கமைய செயற்படுவதோடு அவ் ஆவணத்தைப் பாதுப்பாக கோவைப்படுத்த வேண்டும்.

5.4 பரீட்சைப் பெறுபேறுகளுக்கமைய மாணவர் உதவிப் பணம் பெறுவதற்கு தகைமை பெறின் மீண்டும் வருமானத்தை உறுதிப்படுத்தத் தேவையில்லை.

5.5 **பெற்றோரின் அல்லது** சட்டரீதியான பாதுகாவலரின் **வருமானத்தைப் பிழையின்றிக்** குறிப்பிடுதல் பாடசாலை **அதிபரின் பொறுப்பாகும்.**

5.6 இது தொடர்பாக வழங்கப்படும் வேண்டுகோள்களை **ஏற்றுக்**கொள்ள முடியாதென்பதனால் வருமான மட்டம் தொடர்பான தகவல்களை பெற்றோர் மூலம் உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானது.

**06. உதவிப் பணம் பெற்றுக் கொள்வதற்கான வயதெல்லை**

தற்போது தரம் 5இல் கற்கின்ற 2016.02.01 தொடக்கம் 2017.01.31 வரையுள்ள காலப்பகுதிக்குள் பிறந்த வருமானம் குறைந்த மாணவர்களுக்கு மட்டுமே புலமைப்பரிசில் வழங்கப்படும் என பெற்றோர், சட்டரீதியான பாதுகாவலர்களுக்கு முற்கூட்டியே அறியத்தரவும். இது தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தாலோ கல்விச் செயலாளராலோ வெளியிடப்படுகின்ற சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் செல்லுபடியாகும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

**07. தரவேற்றம் செய்யப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்ளல்**

7.1 நிகழ்நிலை முறைமையில் (Online) தரவேற்றம் (Upload) செய்த பின்னர் தமது பாடசாலை விண்ணப்பதாரிகளின் விவரங்கள் உள்ளடங்கிய (PDF) இன் அச்சுப் பிரதியொன்றை பெற்றுக் கொள்வது கட்டாயமானது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு விண்ணப்பதாரியினதும் தகவல்களை **தனித்தனியாக சரிபார்த்து,** சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமானது என்பதை கவனத்திற் கொள்ளவும்.

7.2 முழுப்பெயர், பிறந்த திகதி, மொழிமூலம், ஆண்/பெண் பால், வருமானம் ஆகிய சகல விவரங்களும் சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளனவா என சரிபார்த்து உறுதிப்படுத்துமாறு பெற்றோர் /பாதுகாவலருக்கு அறிவுறுத்தல் வழங்க வேண்டும்.

7.3 சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் தரவிறக்கம் (Download) செய்து அச்சுப் பிரதியில் மட்டும் விண்ணப்பதாரியினதும் பெற்றோர்களினதும் கையொப்பத்தைப் பெற்று பரீட்சைத் திணைக்களம் கேட்கப்படும் சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பதற்காக பாடசாலையில் பாதுகாப்பாக வைத்திருத்தல் வேண்டும். (பாடசாலையால் தயாரிக்கப்பட்ட **Excel Sheet** இல் பிரதியில் கையொப்பம் பெறலாகாது.)

7.4 Bulk Upload இற்காக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள Excel படிவத்தை தரவிறக்கம் (Download) செய்து அதில் மட்டும் தகவல்களை உள்ளடக்கி முறைமைக்குள் தரவேற்றம் (Upload) செய்யவும். வேறு எந்தப் படிவத்தினதும் மாதிரியைப் பயன்படுத்துவதை தவிர்ப்பதோடு அவ்வாறு பயன்படுத்தின் தங்களால் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் சரியான தன்மை தொடர்பாக பிரச்சினைகள் ஏற்படலாம்.

7.5 தங்களால் விண்ணப்பங்கள் சரியாக பூரணப்படுத்தப்படுவது முக்கியமாதும். 2026.04.30 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்குப் பின்னர் நிகழ்நிலை முறைமை மூடப்படுவதுடன் தரவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் தகவல்களை எக்காரணத்திற்காகவேனும் மாற்றம் செய்ய முடியாது என்பதால் முதற்தடவையிலேயே சரியாக தகவல்கள் தரவேற்றம் செய்வது அதிபரினதும் பரீட்சைப் பொறுப்பாசிரியரினதும் பொறுப்பாகும் என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன்.

7.6 விண்ணப்பதாரிகளின் தகவல்களை நிகழ்நிலை முறைமைக்குள் உள்ளடக்கிய பின்னர் தரவிறக்கம் செய்து (PDF) அதன் அச்சுப் பிரதியில் மட்டும் விண்ணப்பதாரிகளின் கையொப்பங்களைப் பெறும்போது தரவு முறைமைக்குள் உள்ளடக்கப்படாத விண்ணப்பதாரிகளை இனங்காண முடியும்.

கவனிக்கவும் : முறைமைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களின் சரியான தன்மை, தொடர்பாக உரிய பாடசாலையின் அதிபரினதும் பரீட்சைப் பொறுப்பாசிரியரினதும் தனிப்பட்ட ரீதியான பொறுப்பாகும் என்பதை கவனத்திற் கொள்ளவும்.

## 08. வசதியான பரீட்சை நிலையத்தை வேண்டுதல்

கடந்த முறை உங்கள் பாடசாலை விண்ணப்பதாரிகள் தோற்றவுள்ள பரீட்சை நிலையத்தை விட மிகவும் வசதியான நிலையமிருப்பின் அதனை மாற்றஞ் செய்வதற்கு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வேண்டுகோள் ஒன்றை சமர்ப்பிக்கவும்.

மேற்படி விடயங்கள் தொடர்பாக மேலதிக விவரங்களுக்காக கீழே தரப்படும் தொலைபேசி இலங்களூடாக தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| தொலைபேசி இலக்கம் | : 011-2784537 / 011-2786616 / 011-2784208 / 011-2785413 |
| தொலைநகல் இலக்கம் | : 011-2784422 |
| மின்னஞ்சல் முகவரி | : gr5schexam@gmail.com |

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்